**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8073046
C

1. District மாவட்டம் : நாமக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.த.பிரிவு Year ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 04/AC/2019 Date: நாள் 27.02.2019

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as amended Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: by the Prevention of corruption Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 26.02.2019 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு 13.45 மணிக்கு முன்பு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27-02-2019 Time : நேரம் காலை 11.00 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-I 27.02.2019 Time : நேரம் காலை 11.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ திடீர் தணிக்கையின் போது கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 18 கி.மீ. வடகிழக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ.ஊ) அலுவலகம்,
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ ~~தகவல்~~ தந்தவர் பெயர் A.T. ஜெய்குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் அ. தியாகராஜன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.06.1973 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
(f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91-ன் மூலம் அனுப்பப் படுகிறது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. M. Nallammal Rank Dy.Spr. of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27/02/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
27/2/19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

27.02.2019 at 16.00 மணிக்கு

Name: பெயர் A.T. ஜெய்குமார்
Rank: நிலை …………………No. எண் ……….
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊ.த.க. பிரிவு, நாமக்கல்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

HC(0)
27/02/19

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.04/AC/2019, u/s. 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் வரிசை எண்.7 இன் தொடர்ச்சி**

**எதிரிகளின் பட்டியல்**

1) திரு.M.பத்மநாபன் (வயது-52), த/பெ.M.S.மாணிக்கம், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சிகள்), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம்.

2) திரு.K.சுப்ரமணி (வயது-52), த/பெ.கந்தசாமி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம்.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.04/AC/2019, u/s. 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:**

- - -

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 26.02.2019-ஆம் தேதி செவ்வாய்கிழமை மதியம் 13.45 மணி முதல் இரவு 21.00 மணி வரையில் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தில் தரைதளத்தில் இயங்கிவரும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சிகள்) அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 27.02.2019-ஆம் தேதி காலை 11.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.04/AC/2019, u/s. 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், சேந்தமங்கலம் To புதன்சந்தை செல்லும் சாலையில் இயங்கிவரும் சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆக பணிபுரியும் திரு.பத்மநாபன் மற்றும் அலுவலர்கள் குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி, சாலை வசதி ஆகிய பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படும் பணிகளுக்கு ஒப்பந்த அழைப்பு கோருதல் மற்றும் வேலை ஒப்படைப்பு உத்தரவு போன்ற பணிகள் மேற்கொள்வது மற்றும் பணிகள் முடிவுற்று பட்டியல் அனுமதித்தல் மற்றும் ஒப்பந்ததாரார்களின் வைப்பு தொகையை திருப்பி தருவது போன்ற வேலைகளுக்கு அலுவல் நேரத்தில் 26.02.2019-ம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில், அன்று காலை 12.45 மணிக்கு காவல் துணைக் கண்காணிப்பாளர், அரசு சாட்சிகள் திரு.K.லோகநாதன், கண்காணிப்பாளர்/துணை வட்டாட்சியர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் மற்றும் திரு.R.குமரவேல், பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் வடக்கு, நாமக்கல் மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் அரசு வாகனத்தில் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு

அலுவலகத்திலிருந்து புறப்பட்டு சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு மதியம் 13.45 மணிக்கு சென்று சேர்ந்தேன். அலுவலகத்திற்குள் நுழையும் போது போர்டிக்கோ மற்றும் வராண்டாவில் இருந்த நபர்களிடம் விசாரிக்க அங்கிருந்த நபர்களில் சிலர் நாங்கள் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் என்றும், எங்களது ஒப்பந்த வைப்பு தொகையை திரும்ப பெறுவதற்காக வந்துள்ளதாக தெரிவித்தவர்களை அலுவலகத்திற்குள் அழைத்து வந்து காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. மேலும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தரை தளத்தில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அறை மற்றும் அலுவலர்களின் அறைகளில் இருந்து யாரும் வெளியே செல்லா வண்ணம் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களின் அறையில் வடக்கு முகம் பார்த்தவாறு அமர்ந்திருந்த வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களிடம் நான் என்னையும், என்னுடன் வந்த அரசு சாட்சிகளையும் மற்றும் காவலர்களையும் அவரவர்களின் அடையாள அட்டைகளை காட்டி அறிமுகம் செய்து கொண்டேன்.

பின்பு நான் அவரைப் பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் M.பத்மநாபன் என்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களிடம் நான் குழுவினருடன் அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொண்டேன். வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) அவர்களது இருக்கை மற்றும் அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. பின்னர் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திரு.M.பத்மநாபன் அவர்களை சோதனையிடப்பட்டது. சோதனையின் போது அவருடைய சட்டையின் இடது பக்க மேல் வெளி பாக்கட்டில் ரூ.1,700/- இருந்து. அது குறித்து அவரிடம் கேட்க, தனக்கு பல் implant செய்யப்பட்டுள்ளதால் மருந்து வாங்க பணம் கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.1,700/-ஐ அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) மற்றும் அரசு சாட்சிகளை அழைத்துக் கொண்டு அவரது அறைக்கு வெளியே வரப்பட்டது. வெளியே வராண்டாவில் அவரது அறை வாசலில் நின்றிருந்த நபரை பற்றி

விசாரிக்க, அவர் தனது பெயர் V.மல்லப்பன் என்றும் அலுவலக உதவியாளர் என்றும் தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனையிட்டதில் அவரது சட்டையின் இடதுபுற வெளி மேல் பாக்கட்டில் பணம் ரூ.130/- இருந்தது. அது குறித்து நான் அவரிடம் கேட்க அவர் தனது சொந்த செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.130/-ஐ அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின் ஒப்பந்ததாரர்களை ஒருவர் பின் ஒருவராக விசாரிக்க ஒருவர் தனது பெயர் கடல்வீரன் (வயது-34) த/பெ.பெரியசாமி, 2/117, பச்சுடையாம்பட்டி புதூர், சேந்தமங்கலம் என்றும் தான் தனது அம்மா அன்னலட்சுமி பெயரில் ஒப்பந்ததாரர் பதிவு பெற்று சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் கட்டிட ஒப்பந்த பணிகள் செய்து வருவதாகவும், கடந்த 2014-15 ஆம் ஆண்டில் சேந்தமங்கலம் மகளிர் மேல்நிலை பள்ளி, பொட்டனம் காரிபாப்பனூர் ஊராட்சி ஒன்றிய துவக்கபள்ளி ஆகிய இடங்களில் மதிய உணவு சமையல் கூடம் கட்டிய வகையில் தனக்கு வரவேண்டிய வைப்புத்தொகை ரூ.12,783/-க்கான காசோலை பெற வந்ததாகவும், காசோலை வழங்க வைப்பு தொகையில் 15% கையூட்டாக கொடுக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பத்மநாபன் அவர்கள் கேட்டதாகவும், மேலும் அந்த பணத்தை துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு) திரு.சுப்ரமணி அவர்களிடம் கொடுத்துவிடுங்கள் நான் வாங்கி கொள்கிறேன் என்று தெரிவித்ததால் தனது வைப்புத்தொகைக்கான 15% தொகை ரூ.2,000/-ஐ துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு) திரு.சுப்ரமணி அவர்களிடம் கொடுத்துவிட்டு காசோலை பெற்று செல்ல காத்திருந்ததாகவும் தெரிவித்தார். மேலும், காசோலை பெற்றுக் கொண்ட பின் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பத்மநாபன் கையூட்டு கேட்டு பெற்ற கொண்டது சம்பந்தமாக நாமக்கல் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம் வந்து புகார் தெரிவிக்கலாம் என்று இருந்ததாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனையிட்டதில் அவரது சட்டையின் இடது பக்க வெளி மேல் பாக்கெட்டில் ரூ.730/-ஐ வைத்திருந்தார். நான் அது குறித்து அவரிடம் விசாரிக்க, அது தனது சொந்த செலவிற்காக கொண்டு வந்திருப்பதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.730/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அங்கிருந்த மற்றொரு நபரிடம் விசாரிக்க தனது பெயர் செந்தில்குமார்(44), த/பெ.வரதராஜ், 4/48, கிழக்கு தெரு, துத்திகுளம்,

சேந்தமங்கலம் என்றும், கட்டிட பணிகள் செய்யும் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் என்றும், கடந்த 2014-15 ஆம் ஆண்டில் சேந்தமங்கலம் ஒன்றியத்தில் மதிய உணவு சமையல் கூடம் கட்ட ஒப்பந்தம் கோரிய வகையில் தனக்கு வரவேண்டிய வைப்புத்தொகை ரூ.6,976/-க்கான காசோலை பெற வந்ததாகவும், காசோலை வழங்க வைப்பு தொகையில் 15% கையூட்டாக கொடுக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பத்மநாபன் அவர்கள் கேட்டதாகவும், அந்த பணத்தை துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு) திரு.சுப்ரமணி அவர்களிடம் கொடுத்துவிடுமாறு தெரிவித்ததால் தனது வைப்புத் தொகைக்கான 15% தொகை ரூ.1,000/-ஐ துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு) திரு.சுப்ரமணி அவர்களிடம் கொடுத்துவிட்டு காசோலை பெற்று செல்ல காத்திருந்ததாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனையிட்டதில் அவரது சட்டையின் இடது பக்க வெளி மேல் பாக்கெட்டில் ரூ.83/- வைத்திருந்தார். அந்த பணம் தனது இருசக்கர வாகனத்தின் பெட்ரோல் செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்ததால், அந்த பணம் ரூ.83/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின் அங்கிருந்த மற்றொரு நபரிடம் விசாரிக்க அவர் தனது பெயர் சிவசாமி(65) த/பெ.கருப்பண்ணன், காமராஜபுரம், சேந்தமங்கலம் என்றும், தான் கட்டிட பணிகள் செய்யும் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் என்றும், கடந்த 2014-15 ஆம் ஆண்டில் சேந்தமங்கலம் ஒன்றியத்தில் மதிய உணவு சமையல் கூடம் கட்ட ஒப்பந்தம் பெற்று, படத்தையன் குட்டை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, காளப்பநாய்க்கன்பட்டி ஆண்கள் மேல்நிலைபள்ளி ஆகிய இடங்களில் மதிய உணவு சமையல் கூடம் கட்டியதாகவும் அந்த ஒப்பந்தம் கோரியதன் வகையில் தனக்கு வரவேண்டிய வைப்புத்தொகை ரூ.18,477/-க்கான காசோலை பெற வந்ததாகவும், தனது ஒப்பந்த வைப்பு தொகையில் 15% லஞ்சமாக கொடுக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பத்மநாபன் அவர்கள் கேட்டதாகவும், மேலும் அந்த பணத்தை துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு) திரு.சுப்ரமணி அவர்களிடம் கொடுத்து விடுமாறு கூறியதால் வைப்புத் தொகைக்கான காசோலையை பெறுவதற்காக துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு) திரு.சுப்ரமணி அவர்களிடம் ரூ.2,000/-ஐ கொடுத்துவிட்டு காசோலை பெற்று செல்ல காத்திருந்ததாக தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனையிட்டதில் அவரது சட்டையின் இடது பக்க வெளி மேல்பாக்கெட்டில் ரூ.1,330/-ஐ

வைத்திருந்தார். அந்த பணம் குறித்து நான் அவரிடம் கேட்க, அது தனது குடும்ப செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.1,330/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின் மற்றொரு ஒப்பந்ததாரரை விசாரிக்க அவர் தனது பெயர் மலர்வண்ணன்(51) த/பெ.பங்காரு, குப்பநாய்க்கனூர், படத்தையன்குட்டை அஞ்சல், சேந்தமங்கலம் என்றும், தானும் கட்டிட பணிகள் செய்யும் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் என்றும், கடந்த 2014-15 ஆம் ஆண்டில் சேந்தமங்கலம் ஒன்றியத்தில் மதிய உணவு சமையல் கூடம் கட்ட ஒப்பந்தம் பெற்று குப்பநாய்கனூர், காளப்பநாய்க்ன்பட்டி, இராமநாதபுரம், புலவக்கல்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளில் மதிய உணவு சமையல் கூடம் கட்டியதாகவும், அந்த ஒப்பந்தம் கோரியதன் வகையில் தனக்கு வரவேண்டிய வைப்புத்தொகை ரூ.46,950/-க்கான காசோலை பெற வந்ததாகவும், அதேபோல் ஒப்பந்த பணி செய்து வரும் தனது தம்பி மன்னர்மன்னன் மற்றும் தனது நண்பர் ராமமூர்த்தி ஆகியோர்களுக்கும் வைப்பு தொகைக்கான காசோலை வரவேண்டியது குறித்தும் கேட்க வந்ததாகவும். மேற்படி காசோலைகள் வழங்க வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பத்மநாபன் அவர்கள் வைப்பு தொகையில் 15% கையூட்டாக கேட்ட பணத்தை துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு) திரு.சுப்ரமணி அவர்களிடம் கொடுத்துவிடுமாறு கூறியதால் எனது வைப்புத்தொகை ரூ.46,950/-, எனது தம்பி மன்னர்மன்னன் வைப்புதொகை ரூ.22,875/- மற்றும் தனது நண்பர் ராமமூர்த்தியின் வைப்பு தொகை ரூ.20,699/- ஆகியவற்றை பெறுவதற்கும் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் ரூ.10,000/-ஐ துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு) திரு.சுப்ரமணி அவர்களிடம் கொடுத்துவிட்டு காசோலை பெற்று செல்ல காத்திருந்ததாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனை செய்ததில் அவரது பேண்ட்டின் வலது முன் பக்க வெளி பாக்கட்டில் இருந்து ரூ.1,600/- பணம் இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.1,600/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும், ஒப்பந்ததாரர்கள் அனைவரும் காசோலை பெற்றுக் கொண்டபின் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பத்மநாபன் கையூட்டு கேட்டு பெற்றது பற்றி புகார் தெரிவிக்கலாம் என்று இருந்ததாகவும் தெரிவித்தனர். பின்னர்

வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பத்மநாபன் மற்றும் அரசு சாட்சிகளுடன் அலுவலர்கள் அமர்ந்திருக்கும் அறையில் வடகிழக்கு பகுதியில் உள்ள துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) அவர்களின் அறைக்கு செல்லப்பட்டது. அந்த அறையில் வீல் சேரில் கிழக்கு முகம் பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரைபற்றி விசாரிக்க அவர் தனது பெயர் திரு.K.சுப்ரமணி என்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். சாட்சிகள் முன்னிலையிலும் வட்டார வளரச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆகியோர் முன்னிலையிலும் அவரது அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. சந்தேகத்தின் பேரில் அவரை சோதனை செய்ததில் அவர் சட்டையின் இடது வெளி மேல் பாக்கட்டில் 2,000/-ம் நோட்டுக்கள் ஐந்தும், 2,000/-ம் ரூபாய் நோட்டுகள் தனித்தனியாக இரண்டும் மற்றும் 500/- ரூபாய் நோட்டுகள் இரண்டும் ஆக மொத்தம் ரூ.15,000/-ம் கத்தையாக இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க வேண்டிய வைப்பு தொகைக்கு உண்டான வவுச்சரில் BDO திரு.பத்மநாபன் அவர்கள் கையெழுத்து செய்த, அந்த கோப்பை இளநிலை உதவியாளர் திரு.A.K.ராஜேந்திரன் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன் அவரிடம் கொண்டு வந்து கொடுத்து BDO காசோலை தயார் செய்ய சொன்னார் என்றும், அந்த வவுச்சர் சம்பந்தப்பட்ட 7 ஒப்பந்ததாரர்களில் நான்கு ஒப்பந்ததாரர்கள் அவரை வந்து பார்த்து அவர்களது வைப்பு தொகைக்கு காசோலையில் கையெழுத்து செய்ய 15% வீதம் தொகையை அவரிடம் BDO திரு.பத்மநாபன் கொடுக்க சொன்னதாக சொல்லி அன்னலட்சுமி என்பவருக்காக அவரது மகன் கடல்வீரன் ரூ.2,000/-ம், செந்தில்குமார் என்பவர் ரூ.1,000/-ம், சிவசாமி என்பவர் ரூ.2,000/-ம், மலர்வண்ணன் என்பவர் அவருக்காகவும், அவரது தம்பி மன்னர்மன்னன் மற்றும் அவரது நண்பர் திரு.ராமமூர்த்தி என்பவருக்காகவும் சேர்த்து ரூ.10,000/-ம் அவரிடம் தனித்தனியாக கொடுத்ததாக தெரிவித்தார். அந்த பணம் ரூ.15,000/-ஐ (ரூ.2,000X7 & ரூ.500X2) விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். மேலும், அவர் அதே பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.30/-ஐ பற்றி நான் அவரிடம் கேட்க, அவர் தனது சொந்த செலவிற்கு வைத்திருப்பதாக தெரிவித்தார். அந்த பணம் ரூ.30/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின் அவரது இருக்கையின் முன் இருந்த டேபிளின் மேல் இருந்த 2017-2018 Deposit Register பார்வையிடப்பட்டது. அந்த பதிவேடு 1

முதல் 99 பக்கங்களை கொண்டது. அந்த பதிவேட்டில் இறுதியாக பக்கம் எண்.32-ல் வரிசை எண்.144 வரை எழுதப்பட்ட பதிவுகள் உள்ளது. அந்த பதிவேடு பார்வையிடப்பட்டதற்கு அடையாளமாக அதில் நானும், அரசு சாட்சிகளும் கையெழுத்து செய்தோம். அந்த பதிவேட்டின் பக்கங்கள் 28 முதல் 32 வரை நகல் எடுக்கப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களிடம் கையொப்பம் பெற்று விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். அந்த அசல் பதிவேடு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் அவரது டேபிளின் மீதிருந்த ஒப்பந்ததாரர்கள் திருமதி.அன்னலட்சுமி, திரு.செந்தில்குமார், திரு.சிவசாமி, திரு.மலர்வண்ணன், திரு.மன்னர்மண்ணன், திரு.இராமமூர்த்தி மற்றும் திரு.முருகேசன் ஆகியோர்களின் Refund Vouchers பார்வையிடப்பட்டது. அதில் செந்தில்குமார் Voucher No.27/2018-19-ல் மட்டும் Cheque No.342932, Voucher No.27 Dt. 25.2.2019 என்று எழுதப்பட்டு Commissioner, Panchayat Union, Sendamangalam அவர்களால் 22.2.19 என தேதியிட்டு கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்கள் திருமதி.அன்னலட்சுமி, திரு.சிவசாமி, திரு.மலர்வண்ணன், திரு.மன்னர்மண்ணன், திரு.முருகேசன் ஆகியோர்களின் Refund Voucher-ல் 22.2.19 மற்றும் ஒப்பந்ததாரர் ராமமூர்த்தி Refund Voucher-ல் 20.2.19 தேதி ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், சேந்தமங்கலம் அவர்களால் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் அது குறித்து நான் திரு.K.சுப்ரமணி அவர்களிடம் கேட்டபோது தற்பொழுதுதான் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க காசோலைகளை எழுதிக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். மேற்படி 7 வவுச்சர்களை பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும், அரசு சாட்சிகளும் அதில் கையெழுத்து செய்தோம். பின்னர் அவற்றின் நகல்கள் எடுக்கப்பட்டு விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். அசல் Refund Vouchers அனைத்தும் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் அந்த அறையில் K.சுப்ரமணி அவர்களின் இருக்கைக்கு எதிர்புரம் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்தவரை விசாரிக்க, அவர் தனது பெயர் A.K.ராஜேந்திரன் என்றும் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனை செய்தததில் அவரது சட்டையின் இடது புற மேல் வெளிப்பாக்கட்டில் ரூ.1,270/- இருந்தது, அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க

அவர் தனது சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.1,270/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் அந்த அறையில் கணினியில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்தவரை விசாரிக்க தன் பெயர் செல்வி.ஜான்சி என்றும் கணினி இயக்குபவராக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் அவரது இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவரது கைப்பையில் ரூ.3,230/-. இருந்தது. அது குறித்து கேட்டபோது அவர் இன்றைய தினம் காலை வங்கி ATM-ல் தனது கணக்கிலிருந்து ரூ.3,000/- எடுத்ததாகவும், ரூ.230/- ஏற்கனவே செலவிற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்து, அவரது அலைபேசிக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்தது சம்மந்தமாக வந்த குருஞ்செய்தியை காணபித்தார். அவரது விளக்கம் ஏற்று கொள்ள தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.3,230/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின் அலுவலக அறையில் இருந்த அலுவலர்களின் இருக்கை மற்றும் அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அலுவலர்கள் அறையின் தெற்குபகுதியில் வடக்கு திசை பார்த்து அமர்ந்திருந்த துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) இருக்கையில் இருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் திரு.N.திருஞானம் என்று தெரிவித்தார். அவரது இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. பின் அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் தனது சட்டையின் இடது வெளிபுற மேல் பாக்கெட்டிலிருந்து ரூ.270/-ஐ எடுத்து ஆஜர் செய்து சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.270/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் கணக்கர் (பொது) திரு.M.பழனிசாமி அவர்களின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவர் அவரது பீரோவில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தணிக்கை அறிக்கை 2017-18 பார்வையிடப்பட்டது. அந்த தணிக்கை அறிக்கை மொத்தம் 636 பக்கங்கள் கொண்டது அசலாக விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின் அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் தனது சட்டையின் இடது பக்க வெளி மேல் பாக்கட்டிலிருந்து ரூ.560/-ம் அவரது பேன்டின் இடதுபக்க வெளிபுற முன் பாக்கெட்டில் வைத்திருந்த Money Purse-ல் இருந்து ரூ.500/-ம் எடுத்து

ஆஜர் செய்து சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் மொத்தம் ரூ.1,060/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் அ1 இருக்கை உதவியாளர் திரு.K.நந்தகோபால் என்பவரின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவர் 2019-ஆம் ஆண்டிற்கான சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வட்டார ஊராட்சி பிரிவு, அலுவலக பணியாளர்களின் தினசரி வருகை பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். பக்கம்-1 முதல் 50 வரையுள்ள அப்பதிவேட்டை பார்வையிட்டதில் 2019-பிப்ரவரி மாதத்திற்கான வருகை பதிவேட்டில் பக்கம் 6-ல் 26-ம் தேதி அலுவலர்கள் சுருக்கொப்பம் செய்து இறுதியில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்கள் சுருக்கொப்பம் செய்துள்ளார். அந்த பதிவேட்டை பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும், அரசு சாட்சிகளும் கையெழுத்து செய்தோம். அந்த பதிவேட்டின் அசல் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின் அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் தனது சட்டையின் இடது வெளிபுற மேல் பாக்கட்டிலிருந்து ரூ.410/-ஐ எடுத்து ஆஜர் செய்து சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.410/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் அ2 இருக்கை உதவியாளர் திருமதி.N.லதா அவர்களின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவரது இருக்கை டேபிளின் மீதிருந்து அவர் எடுத்து ஆஜர் செய்த ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் பதிவேடு ஊராட்சி ஒன்றியம் சேந்தமங்கலம் 2012-13 முதல் என்று எழுதப்பட்ட பதிவேடு பார்வையிடப்பட்டது. பக்கம் 1 முதல் 50 வரையுள்ள அந்த பதிவேடு பார்வையிடப்பட்டதற்கு அடையாளமாக பக்கம் 15-ல் நானும், அரசு சாட்சிகளும் கையெழுத்து செய்தோம். அப்பதிவேட்டை அசலாக விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின் அவர் எடுத்து ஆஜர் செய்த மூலதன மானிய நிதி 2017-18 சம்பந்தப்பட்ட கோப்பு எண். 524/2019/அ2 10 பக்கங்கள் கொண்டது, திரு.மா.பத்மநாபன், ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், சேந்தமங்கலம் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களுக்கு ந.க.எண். 374/2019/அ2 நாள்:31.01.2019 என சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம் - நிலவும் குடிநீர் தட்டுப்பாடு காரணமாக குடிநீர் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்க கோரி

அனுப்பிய கடிதம் மற்றும் அதன் கோப்பு 36 பக்கங்கள் கொண்டது மற்றும் கு.கோ.எண்.374/2019/அ2 4 பக்கங்கள் கொண்டது ஆகியவை பார்வையிடப்பட்டது. அக்கோப்பு சம்பந்தமாக ஒப்பந்ததாரர்கள் கொடுக்கும் மூடி உரையிட்ட ஒப்பந்தபுள்ளி விபரங்கள் எதுவும் எந்த ஒரு ஒப்பந்ததாரரிடமிருந்தும் இன்று 26.02.2019-ம் தேதி வரை பெறப்படவில்லை என்று வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.M.பத்மநாபன் மற்றும் அ2 உதவியாளர் திருமதி.N.லதா ஆகியோர்கள் விளக்கம் தெரிவித்தார்கள். அந்த அசல் கோப்புகளை விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின் உதவியாளர் திருமதி.N.லதா அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் தனது கைப்பையில் இருந்து ரூ.230/-ஐ எடுத்து ஆஜர் செய்து சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.230/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் காசாளர் மற்றும் அ3 இருக்கை பொறுப்பை கவனிக்கும் இளநிலை உதவியாளர் திரு.P.உதயகுமார் அவர்களின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவர் டேபிளின் மீதிருந்த தொகை ரூ.23,150/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது சம்பந்தமாக சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய சிட்டா பதிவேடு 01.4.2018 முதல் உள்ள பதிவேட்டையும் எடுத்து ஆஜர் செய்தார். அப்பதிவேட்டை பார்வையிட்டதில் 25/02/2019-ம் தேதிக்கான கணக்கு முடிக்கப்பட்டு மொத்தம் ரூ.23,150/- வசூல் செய்யப்பட்டுள்ளது. அந்த தொகைக்கான சலான் சரிபார்க்கப்பட்டது. மேற்படி தொகை ரூ.23,150/-ஐ வங்கியில் செலுத்த சலான் பூர்த்தி செய்து வைக்கப்பட்டிருந்ததையும் சரிபார்க்கப்பட்டது. மேற்படி சிட்டா பதிவேட்டை பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும், அரசு சாட்சிகளும் பக்கம் 60-ல் கையொப்பம் செய்து சம்பந்தப்பட்ட பக்கங்கள் 58, 59 மற்றும் 60 ஆகியவை நகல் எடுக்கப்பட்டு நான் விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். அசல் சிட்டா பதிவேடு சலான்கள் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் கொடிநாள் வசூல் இலக்கு ஏதேனும் உள்ளதா என்று கேட்க கொடி நாள் ரசீது குறித்த கோப்பை எடுத்து ஆஜர் செய்தார். அக்கோப்பை பார்வையிட்டதில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் அவர்களின் உத்தரவு Roc.No.3343/2018/A3, நாள்:28.11.2018-ன் படி சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.3,00,000/-க்கான இலக்கு

நிர்ணயிக்கப்பட்டு அதற்கான இரசீதுகள் வழங்கப்பட்டுள்ளது. அந்த இலக்கை சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.5274/2018/அ3, நாள்:20.12.2018-படி 14 ஊராட்சிகளுக்கும் இலக்கு நிர்ணயித்து இரசீது புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது. 16.02.2019-ம் தேதி வரை மொத்தம் ரூ.85,600/-வசூல் செய்யப்பட்டு உதவி இயக்குநர், முன்னாள் படை வீரர் நலம், நாமக்கல் அவர்களுக்கு வரைவோலையாக அனுப்பப்பட்டுள்ளது. அக்கோப்பு சம்பந்தப்பட்ட பக்கங்கள் நகல் எடுக்கப்பட்டு நான் விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். அசல் கோப்பு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் திரு.P.உதயகுமார் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் தனது சட்டையின் இடதுபுற மேல் வெளி பாக்கெட்டிலிருந்து ரூ.770/-ஐ எடுத்து ஆஜர் செய்து அது தன் சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.770/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் அலுவலக உதவியாளர் பொறுப்பு பதிவறை எழுத்தர்/ தபால் அனுப்புகை எழுத்தர் திரு.C.யுவராஜ் அவர்களின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவரது இருக்கையில் அமர்ந்து எழுதிக்கொண்டிருந்த 2019 ஆம் ஆண்டு Stamp Account ஊராட்சி ஒன்றியம் சேந்தமங்கலம், நாமக்கல் (மா.வ) 2.1.2019 முதல் என எழுதப்பட்டுள்ள பதிவேடு பார்வையிடப்பட்டது. மேலும் திரு.C.யுவராஜ் 12.2.2019-ம் தேதி தபால் அனுப்பப்பட்டதற்கான பதிவுகள் எழுதிக் கொண்டிருந்ததாக தெரிவித்தார். அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அவர் தனக்கு ஒப்பந்ததாரர்கள் முகவரி தெரியாது என்பதால் பக்கம் எண்.12-ல் 18.01.2019-ம் தேதி ந.க.எண்.3670/18/அ2 தேதி 11.01.2019 மற்றும் 3269/18/அ2 தேதி 18.01.2019 ஆகியவற்றில் உள்ள முகவரிகளை பார்த்து எழுதியதாக தெரிவித்தார். அப்பதிவேடு பார்வையிட்டதற்கு அடையாளமாக பக்கம் எண்.28-ல் நானும் அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். அப்பதிவேடு அசலாக விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அப்பதிவேட்டில் 1 ரூபாய் தபால் தலைகள் 75 இருந்தது. 11.2.2019-ம் தேதி முடிவில் ஒரு ரூபாய் வில்லைகள் 52 உள்ளதாக கணக்கு முடித்துள்ளார். இந்த வேறுபாடு குறித்து அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவரால் உரிய விளக்கம் அளிக்க இயலவில்லை. 75 ஒரு ரூபாய் தபால் தலைகள் அவரிடமே

திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் அவர் எடுத்து ஆஜர் செய்த 2019-ஆம் ஆண்டிற்கான உள்ளூர்/வெளியூர் தபால் பதிவேடு ஊராட்சி ஒன்றியம், சேந்தமங்கலம் 02.01.2019 முதல் பார்வையிடப்பட்டது. இப்பதிவேட்டில் இறுதியாக 25.2.2019-ஆம் தேதி வரை பதிவுகள் உள்ளது. அப்பதிவேடு பார்வையிட்டதற்கு அடையாளமாக பக்கம் எண்.47-ல் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். அப்பதிவேடு அசலாக விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றிக் கொண்டேன். பின் திரு.C.யுவராஜ் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் தனது சட்டையின் இடதுபுற மேல் வெளி பாக்கெட்டிலிருந்து ரூ.370/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தன் சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.370/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

திடீர் தணிக்கையின்போது திரு.சுப்ரமணி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) என்பவரிடமிருந்து மொத்தம் ரூ.15,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி நிகழ்வுகளுக்கு அரசு சாட்சிகள் மற்றும் திரு.M.பத்மநாபன், வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சிகள்) ஆகியோர் முன்னிலையில் என்னால் செயல்முறை நடவடிக்கைகள் 26.02.2019-ஆம் தேதி மதியம் 13.45 மணி முதல் இரவு 21.00 மணி வரை தயார் செய்யப்பட்டது, அதில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து, மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.M.பத்மநாபன் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. பின்னர் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.M.பத்மநாபன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.K.சுப்ரமணி மற்றும் ஒப்பந்ததாரர்கள் திரு.P.கடல்வீரன், திரு.P.மலர்வண்ணன், திரு.V.செந்தில்குமார், திரு.K.சிவசாமி ஆகியோர்களிடம் தனித்தனியாக விசாரணை செய்யப்பட்டு அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி திடீர் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.15,000/-, ஆவணங்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் திரு.M.பத்மநாபன் (வயது-52), த/பெ.M.S.மாணிக்கம், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சிகள்), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம் மற்றும் திரு.K.சுப்ரமணி (வயது-52), த/பெ.கந்தசாமி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு), ஊராட்சி ஒன்றிய

அலுவலகம், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம் ஆகியோர்கள் பொது ஊழியர் என்ற வகையில் தங்களது பணியை செய்ய ஒப்பந்ததாரர்களிடமிருந்து கையூட்டாக பணம் ரூ.15,000/- கேட்டு பெற்றுக் கொண்டது தெரிய வந்ததால் இன்று 27.02.2019-ஆம் தேதி காலை 11.00 மணிக்கு மேற்படி எதிரிகள் 1) திரு.M.பத்மநாபன் மற்றும் 2)திரு.K.சுப்ரமணி ஆகியோர்கள் மீது நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.04/AC/2019, u/s. 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை கனம் நாமக்கல் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வழக்கில் புலன் விசாரணையை மேற்கொள்ள நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.M.நல்லம்மாள் அவர்களுக்கு பணிக்கப்பட்டது.

27/02/19

(A.T. ஜெய் குமார்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.